DEPOSITION OF WITNESS
CHAPTER CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.
**O.S. No. 191/2024**

Deposition of Witness : P.W. 2

| | |
|---|---|
| Name - **திரு.பாலமுருகன்** | Father's Name - **திரு.** |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of **12.03.2026**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )
**முதல் விசாரணை** –

1. எனது சொந்த ஊர் ஸ்ரீரங்கபுரம். தற்போது நான் அல்லி நகரத்தில் குடியிருந்து வருகிறேன். ரியல் எஸ்டேட் புரோக்கர் மற்றும் இடம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கின் வாதியான லட்சுமி அம்மாள் எனது சித்தி. இந்த வழக்கின் பிரதிவாதிகளான முத்துவேல், பிரேமா, முத்து ஹரிஷ் ஆகியோர்களை எனக்கு தெரியும். எனது சித்தி வீட்டிற்கு அவர்கள் வரும் போகும் வகையில் நான் அவர்களை பார்த்திருக்கிறேன். எனக்கு அவர்கள் நேரடியாக தெரியாது. எனது சித்தி மூலமாக பழக்கம்.

2. கடந்த 10.09.2022-ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் எனது சித்தியான லக்ஷ்மியம்மாள் அவர்கள் பிரதிவாதிகள் தன்னிடம் பணம் வாங்க வருவதாகவும் என்னை வர வேண்டுமென சொன்னதன் பேரில் நான் வாதியின் வீட்டிற்கு காலை 10.00 மணிக்குச் சென்றேன். ரூ.10 லட்சம் பிரதிவாதிகள் பணம் கேட்டிருந்தார்கள். அவரது மகனை வெளிநாட்டிற்கு அனுப்புவதற்காகவும், சொந்த செலவிற்காகவும் அந்த பணம் கேட்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக புரோநோட்டு எழுதிக் கொடுத்து எனது சித்தியிடம் பிரதிவாதிகள் ரூ.10 லட்சம் பணம் கடன் பெற்றுக் கொண்டார்கள்.

3. பிரதிவாதிகளுடன் வந்த சக்திவேல் என்பவர் புரோநோட்டை அவர் எழுதினார். சாட்சியாக நான் மற்றும் முத்து ஹரிஷ் ஆகியோர் போட்டோம். நூறு ரூபாய்க்கு மாதம் ஒரு ரூபாய் வட்டி என பேசப்பட்டது. எழுதிய நபர் அந்த புரோநோட்டில் கையெழுத்து எதுவும் போடவில்லை. எழுதியதும், சாட்சி என்று அவர் கீழே எழுதியுள்ளார். லட்சுமி அம்மாள் விவசாயம் செய்து வருகிறார் சொத்து விற்ற பணம் அவர் கையில் வைத்திருந்தார். அந்த தொகையை தான் அவர் பிரதிவாதிகளுக்கு கடனாக கொடுத்தார்.. என்னிடம் காண்பிக்கக்கூடிய வா.த.சா.ஆ.1. புரோநோட்டில் உள்ள இரண்டாவது சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன். உள்ளூரைச் சேர்ந்த மணிவண்ணன் என்பவர் சொசைட்டில் வேலை செய்து வருகிறார் அவரை எனது சித்தி லட்சுமி அம்மாள் அழைத்து பணம் கொடுக்கும் போது அவரும் உடனிருந்தார். ஆனால் அவர் ஆவணங்களில் கையெழுத்திடவில்லை.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.12 18:24:13 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.